IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 453/2019

சாட்சி : PW2

பெயர் : கிருஷ்ணமூர்த்தி தேதி: 13-02-2024

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

தற்போது என்னுடைய வயது 77. தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். வாதி என்னுடைய குடும்ப நண்பர். வாதியை எனக்கு 7 ஆண்டுகளாக தெரியும். என் மருமகன் நரேஷ்பாபு இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி நரேஷ்பாபுவின் அக்காவின் கணவர் ஆவார். 2ம் பிரதிவாதி நரேஷ்பாபுவின் உடன் பிறந்த சகோதரி ஆவார். வாதி பணத்தை கட்டாக கொடுத்தார். நான் எண்ணி பார்க்கவில்லை. நான் வாதியிடம் சொல்லி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்தார் என்றால் ஆமாம். வாதி பொறியாளராக உள்ளார். அந்த சமயத்தில் நிலம் ஏதாவது விலைக்கு வந்தால் கூறுங்கள் என்று என்னிடம் கூறியிருந்தார். நான் ஓய்வு பெற்ற சார்பதிவாளர். வாதி, பிரதிவாதிகளை முதன் முதலாக பணம் கொடுக்கும்போது பார்த்தார். வாதிக்கு அதற்கு முன்னர் என் மூலமாக பிரதிவாதிகளை தெரியும். வா.த.சா.ஆ-A1 பிரதிவாதிகள் தயார் செய்து வந்தார்கள். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். இன்னொரு சாட்சியாக கதிர்வேல் போட்டுள்ளார். அவர் என்னுடைய நண்பர் என்றால் ஆமாம். கதிர்வேலை நான் தான் வாதி வீட்டிற்கு அழைத்து சென்றேன். என்னுடைய மருமகன் நரேஷ்பாபுவின் பெற்றோர்கள் சென்னையில் உள்ளார்கள். அங்கு அவர்களுக்கு சொந்த வீடு உள்ளது. அந்த வீட்டை என் மகள் பெயருக்கு எழுதி தர நான் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய தூண்டுதலின் பேரில் வாதி பொய்யாக இந்த வழக்கு போட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கறிஞர் அனுப்பிய

சமயத்தில் பிரதிவாதிகள் தருமபுரியில் குடியிருந்து வந்தார்கள். பிரதிவாதிகளிடம் நான் பணத்தை வாதிக்கு திருப்பி தருமாறு கேட்கவில்லை. வாதி, பிரதிவாதிகளிடம் என்னை பணம் வாங்கி தருமாறு தொந்தரவு செய்யவில்லை. வாதி, பிரதிவாதிகளிடம் எந்தெந்த தேதியில் நேரில் சென்று பணம் கேட்டார் என்று எனக்கு தெரியாது. வாதி என்னிடம் அவர் பிரதிவாதிகளிடம் நேரிலும், போன் மூலமாகவும் பணம் கேட்டதாகவும், பிரதிவாதிகள் சரியான பதில் கூறவில்லை என்று சொன்னார். நான் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்களை தெரிந்து கொள்ளாமல் வாதி தட்டச்சு செய்து வைத்ததில் நான் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒரு மாதம் கூட வட்டி செலுத்தவில்லை. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் சுமூகமான உறவுமுறை தற்போதும் உள்ளது. 1ம் பிரதிவாதி தற்போது தருமபுரியில் குடியிருந்து, கல்லூரி விரிவுரையாளராக கிருஷ்ணகிரியில் பணி செய்கிறார். என்னுடைய தூண்டுதலின் பேரில் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி, பிரதிவாதிகளுக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பணம் தேவைப்பட்டதால் அவருடைய சொத்து பத்திரத்தை என்னுடைய மருமகன் நரேஷ்பாபுவிடம் கொடுத்து வைத்திருப்பதால், என்னுடைய தூண்டுதலின் பேரில் இந்த பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.